


# கற்றறிந்த காக்கைகள்

பேனா. மனோகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றறிந்த காக்கைகள்

பேனா. மனோகரன்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
41B, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை - 98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணும் மண்ணும் அளாவிய தத்துவப் பார்வை

*- தி.க.சி. -*

கவிஞர். பேனா. மனோகரனின் “கற்றறிந்த காக்கைகள்” எனும் நூலைப் படித்தேன். இது இவரது இரண்டாவது புதுக்கவிதைத் தொகுப்பாகும். 1976-ல் இலங்கையில் வெளியிடப்பட்டது, இவரது ‘சுமைகள்’ என்ற முதல் புதுக்கவிதைத் தொகுதி.

32 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு இத்தொகுதி வெளி வருகிறது.

“1976-ல் அதிகாரக் கோரைப் பற்கள் முளைத்ததினால் 2000 வரை அடையாளம் இழந்தும், இலக்கு மறந்தும் அல்லாடியது இந்த அகதிப் பறவை. புலம் பெயர்ந்த தமிழகச் சூழலில் சகோதர சகோதரிகளை நிலை நிறுத்த ‘நல்ல போராட்டத்தைப் போராடினேன்’. ஆனாலும் கவிதை வாசிப்பும், நேசிப்பும் எனக்கு நல்ல இறைப்பாறுதலைத் தந்தது” என்று கவிஞர் தனது என்னுரையில் கூறுகிறார்.

இந்தக் காலகட்டத்தில் மிகக் குறைவாக எழுதினாலும், மிகச் சிறப்பாகத் தமது கவிதைப் பணியைச் செய்திருக்கிறார்.

இந்தக் கவிதைத் தொகுப்பில், மொத்தம் 35 கவிதைகள் உள்ளன. இவற்றில் 20 கவிதைகள் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன.

அவை வருமாறு,

* அகதி அணில்கள்
* வீடும் கூடும்
* எப்புடீம்மா?
* வேப்ப மரத்திடம் ஒரு விசாரணை
* உறவுகள்
* வெடிக்கும் வேதனைகள்
* அக்கினிக் கோளம் ஆகும் பூமி
* இயற்கையின் ரங்க ராட்டினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மாநகரமும் நரகமும்
* இப்படித்தான் பொழுது விடியும்
* தீ இனிது
* பெட்டை நாய்க்குட்டி
* ஆழிப்பேரலை
* சீதனச் சிறைகளில் சீதைகள்
* கடவுளும் காவலும்
* அகதி முக(ா)ம்
* தொலைந்து போகும் தொன்மங்கள்
* சித்தார்த்தனைத் தேடும் போதி மரங்கள்
* பிள்ளைகள் போதிமரம்
* தவறிய தாய் நினைவுகள்

மேற்காணும் 20 கவிதைகளும் இவரது ஆழ்ந்த கவி உள்ளத்திற்கும் சரியான திசை வழியில் செல்லும் தத்துவப் பார்வைக்கும், சான்றுகளாகும்.

இன்றையக் கவிஞனுக்கு, கவித்திறன் மட்டும் போதாது. மக்கள் நலம் - நாடும், உலகு. தழுவிய, மனிதநேயக் கண்ணோட்டமும் தேவை. துரதிஸ்ட வசமாக, இன்றைய புதுக்கவிஞர்களில், ஒரு கணிசமான பகுதியினர், வாழ்க்கைப் போராட்டங்களில் இருந்து அன்னியமாகி ஒதுங்கி நிற்கின்றனர். தற்காலக் கவிஞனுக்கு வெறும் அழகியலும் கவித்துவமும், சொல் நேர்த்தியும் மட்டும் போதாது. அவன் சமூக விஞ்ஞானியாகவும், சமூக நீதிக்காகத் தனது படைப்புக்களை ஆயுதமாகப் பயன்படுத்தும் வல்லமை வாய்ந்தவனாகவும், அறநெறிகளை உயர்த்திப் பிடிக்கும், சான்றோனாகவும் திகழ வேண்டும். இத்தகைய பண்புகளை பேனா மனோகரனிடம் நான் காண்கிறேன். ஆகவே அவரின் கவிதைகளைப் பாராட்டுகிறேன்.

பேனா. மனோகரனின் கவிதைகள் உருவத்திலும், உள்ளடக்கத்திலும் எனக்கு மனநிறைவை அளிக்கின்றன. அவரது கவிதைகளில் புதுமையும், தனித்துவமும் மனித நேயமும், அழகியல் கூறுகளும் நிரம்பியுள்ளன. இவர் புதுக் கவிதையில் சில பரிசோதனைகளையும் செய்ய முயன்றிருக்கிறார். அவரது கவிதைகளில் சோகமும், அங்கதமும், அனைத்து உயிரினங்களையும் நேசிக்கும் கருணை உள்ளமும் புலப்படுகின்றன.

இவரது கவிதைகளில் தேசியம், சர்வ தேசியம், பெண்ணியம், தலித்தியம், சுற்றுச்சூழலியம் என்னும் தத்துவ நோக்கைக் காண்கிறேன். 'இன்றைய உலகமயச் சூழலில் இத்தத்துவங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருங்கிணைந்த பார்வையுடனும், சிறந்த கலை அம்சத்துடனும் கவிதைகள் படைக்கப்படவேண்டும் என்பது என் கருத்தாகும்.

*"நமக்குத் தொழில் கவிதை*
*நாட்டிற்கு உழைத்தல்*
*இமைப் பொழுதும் சோராதிருத்தல்"*

- என்பது மகாகவி பாரதியின் வாழ்க்கை நெறியாகும்.

இன்றைய தமிழ்க் கவிஞன், கவிதை எழுதுவதுடன் களப் பணியாளனாகவும் திகழ வேண்டும். அப்படியானால்தான், அவன் வாழ்க்கை முழுமை பெறும், பொருள் பொதிந்ததாக விளங்கும்.

மகாகவி பாரதியும், புரட்சிக் கவி பாரதிதாசனும், உலகப்பெருங் கவி பப்லோ நெருடாவும் இப்படித்தான் வாழ்ந்து பணியாற்றினார்கள். இவர்கள் பாதையில் செல்லும் ஒரு கவிதை ஊழியனாக பேனா. மனோகரன் மிளிர்கிறார்.

கலை இலக்கியப் பெருமன்றம் முதலிய அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுகிறார், இது பெரிதும் பாராட்டத்தக்கது.

*காக்கைக் குருவி எங்கள் ஜாதி - நீள்*
*கடலும் மலையும் எங்கள் கூட்டம்*

என்னும் பாரதியின் "விண்ணும் மண்ணும் அளாவிய தத்துவப் பார்வையும் இயற்கையையும் மனிதகுல விடுதலையையும், ஒருசேர நேசிக்கும் கவி உள்ளமும் இவரிடம் காண்கிறேன்."

தமிழ் புதுக்கவிதை உலகிற்கு 70 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு இருக்கிறது. இதில் புதிய புதிய பரிசோதனை முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இந்தச் சூழலில், இவரது கவிதைப் பயணம் அயர்வு சோர்வு இன்றி வீறுடன் தொடர வேண்டும். மண் பயனுற வேண்டும் வானகம் இங்கு தென்படவேண்டும். கவிஞர் பேனா. மனோகரனுக்கு என் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

01.09.2008 அன்பன்

நெல்லை - 6 தி.க.சி.

(தி.க.சிவசங்கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்குருதி

தமிழக அரசின் காவல்துறையில் சுமார் 30 ஆண்டுகள் பணியாற்றி, இறுதியாக மதுரை இரயில்வேக் கோட்டத்தின் உயர் காவல்துறை அதிகாரியாகச் சமீபத்தில் பணிநிறைவு பெற்றிருப்பவர், கவிஞர் பேனா.மனோகரன்.

தன் வாழ்நாளில் மிகக்குறைந்த அளவே கவிதைகள் எழுதும் கவிஞர்களுக்குத் தமிழ்க்கவிதை உலகில் தனி இடம் உண்டு. வண்டி வண்டியாய்க் கவிதைகளை எழுதித்தள்ளுகிறவர்களை வெறுப்புடன் ஏறிட்டுப் பார்க்கும் தமிழ்க்கவிதை ரசிகர்கள் பலரை எனக்குத் தெரியும்.

கை நிறைய பிளாஸ்டிக் பொருள்கள் வைத்திருப்பதைவிட, விரலில் கிடக்கும் ஒற்றை வைர மோதிரம் மதிப்புடையது அல்லவா...?

குறைவாக எழுதினாலும், அடர்த்தியாக எழுதுவது, கவிதைக்கு 'அழகு' கவிஞர் பேனா.மனோகரன் அவர்களின் கவிதைகளில் 'காக்கி' நிறம் பதிவாகாமல் இருப்பது ஒரு சிறப்பு.

'பேனா' என்ற அடைமொழி இவர் பெயருடன் மிக இயல்பாய்ப் பொருந்திவிட்டது. கவிஞர், காவல்துறை உதவி ஆய்வாளராகத் திருநெல்வேலியில் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்திலிருந்தே எனக்கு நெருக்கமாக இருந்தார்.

வருடம் தோறும், பொங்கல் தினத்தன்று எங்கள் கவிதைகள் சந்தித்துக் கைகுலுக்கிக் கொள்ளும். காவல்துறையில் கவிஞர். பணியாற்றிய காலங்களின் என்னைப்போன்ற இலக்கியவாதிகள் பலருக்கும் நிரம்ப உதவிகளைச் செய்துள்ளார் என்பதை இங்கு பதிவு செய்வது என் கடமை என்று கருதுகிறேன்.

நவீன தகவல் தொடர்பு சாதனங்களின் வருகை, உலக மயமாக்கல், மின்னணுமயம், இயந்திரமாக்கல் போன்ற அறிவியல் காரணங்களால், மனித வாழ்க்கையில் சில மாற்றங்கள் புகுந்துவிட்டன. இம்மாற்றங்கள், காக்கைகளையும் விட்டு வைக்க வில்லை என்பதைக் கவிஞரின் "கற்றறிந்த காக்கைகள்" என்ற கவிதை சுட்டிக் காட்டுகிறது.

மழைநாளில் ஓடுகள் உடைந்து ஒழுகும் வீட்டில் ஒரு தாய் தன் பிள்ளைகளுடன் படுத்துக்கிடக்கிறாள். மிக லேசாக ஆரம்பித்த மழை, நேரமாக, நேரமாக வலுக்கிறது. மழையின் தண்ணீர், உடைந்த ஓடுகள் வழியாக ஒழுக ஆரம்பிக்கிறது

வீட்டில் படுக்கை அறை என்று தனியே எதுவும் கிடையாது. பூஜை அறை முதல், சமையல் அறை வரை ஒரே அறைதான். ஒழுகும் மழைநீரை ஏதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாத்திரத்தில் பிடிக்க வேண்டும், இல்லை என்றால், அந்த அறை முழுவதும் மழைத் தண்ணீரால் நனைந்து விடும். எனவே மழைத் தண்ணீரைத் தரையில் விழாமல், சேகரிக்க வேண்டும்.

இரவில் தாயும் பிள்ளைகளும் தூங்கிக் கொண்டிருக்கிற போது, மழை வந்து விடுகிறது. இனி எப்படித் தூங்க முடியும்? தாயுடன் படுத்திருந்த அண்ணனும் தம்பியும் தகர டப்பாக்களில், ஒழுகும் மழை நீரைச் சேமிக்கின்றார்கள். (பித்தளைப்பாத்திரங்களால் மழை நீரைச் சேகரிக்கவில்லை).

இந்த மழைக்கால கொடுமையான அனுபவம் எனக்கும் ஒரு காலத்தில் நேர்ந்தது. எனக்கு அந்த அனுபவத்தைக் கவிதையாக்கத் தெரியவில்லை! கவிஞர் பேனா. மனோகரன் அந்த அனுபவத்தைக் கவிதையாக்கித் தந்துள்ளார்.

"மழைக் காலங்களில்,
காலை மழைக்கு கிழக்கிலும்
மாலை மழைக்கு மேற்கிலும்
ஒழுகும்..."

என்று சோகமான அந்தச் சூழலையும் ஆராய்ச்சி செய்து, காலையில் எத்திசையிலிருந்து மழைநீர் வீட்டினுள் ஒழுகும், மாலையில் எத்திசையிலிருந்து மழை நீர் வீட்டினுள் ஒழுகும் என்று பதிவு செய்கிறார் கவிஞர்.

"தரை ஈரமானால்
தூங்க முடியாது இரவென்று
துயர்படுவாள் அம்மா" என்று

எழுதிய கவிஞர்,

காலப் பெருவெளியின்
கடினப் பயணத்தில்
எங்கள் வீடும் ஏன் எல்லா வீடுகளும்
காங்கிரீட் கூரைகள் ஆயின.
....
காங்கிரீட் கூரைகளில்
ஒழுகவும் இல்லை
கவலைப்பட அம்மாவும் இல்லை"

என்று உணர்ச்சி மயமாய் தன் கவிதையை முடிக்கிறார். இந்தக் கவிதைக்கு 'அற்றைத்திங்கள்' என்று தலைப்பிட்டுள்ள கவிநயம்தான் என்னை சிலிர்க்க வைத்தது. கபிலரின் அந்த வார்த்தைகள் இக்கவிதையின் தலைப்பாய் கனகச்சிதமாய்ப் பொருந்துகிறது.

மழைக்காலத்தில் தான் இப்படி என்றால், வெயில் காலத்தில், உடைந்த கூரையின் ஓடுகளின் வழியே கசியும் சூரிய ஒளிக்கதிர்களை, வீட்டினுள் படுத்துக்கிடக்கும் அந்தச் சிறுவன் பார்த்து ரசிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சூரிய ஒளிக்கதிர்களில் தூசு துப்பட்டைகளும், நுண்ணிய துகள்களும் காற்றில் பறப்பது நன்றாகத் தெரிகிறது. வறுமையையும், ஏழ்மையையும், மறந்த அந்தச் சிறுவன், தரைக்கும், ஆகாயத்திற்குமான தகவல் தொடர் சாதனமாக அந்தச் சூரிய ஒளிக்கற்றைகளைப் பார்த்து ரசிக்கிறான்.

வறுமையையும், ஏழ்மையையும் கூட கலை அழகுடனான கவிதை களாகப் படைக்க முடியும் என்பதை,

"உடைந்த ஓடுகளினூடே
சூரிய ஒளிக்கதிர்கள்
சுழலும் துகள்களுடன்
தரைக்கும் ஆகாயத்திற்கும்
தகவல் தொடர்பை ஏற்படுத்தும்"

என்ற வரிகள் மூலம் கவிஞர் நிரூபித்துள்ளார்.

கவிஞர், இலங்கையில், ஈழ மண்ணில் பிறந்தவர். தாய்நாட்டில் இருந்து இன்னொரு தாய்நாட்டிற்குக் காலத்தின் கட்டாயத்தால் புலம் பெயர்ந்து வந்தவர். நான் பிறந்த ஊரிலேயே ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆரை அடித்தது போல் கிடக்கிறேன். பிறந்த மண்ணைப் பிரிந்து வாடும் துயரத்தை அனுபவித்தவன் அல்ல நான். ஆனால், கவிஞரின் ஆழ்மனதில் 'புலம் பெயர்ந்த' அந்த வலியும், வேதனையும் வெளிப்படாமல் நிறைந்து கிடக்கிறது. எனவேதான், 'அணில்கள்' என்று ஒரு கவிதைக்குத் தலைப்புக் கொடுக்க வந்தவர், 'அகதி அணில்கள்' என்று தலைப்புக் கொடுக்கிறார். 'புங்கை மரம்' என்று கவிதையில் ஒரு வரியை வார்த்தைகளாக எழுத வந்தவர், 'புலம் பெயர்ந்த புங்கை மரம்' என்று எழுதி வைக்கிறார்.

கவிஞன், மேடைப் பேச்சாளன் அல்ல, ஊர் உலகத்தைக் கூட்டி, உரக்கச் சத்தமிட மிக மிக, பூடகமாக, சூசகமாக, ரொம்ப நுட்பமாக, கவிஞர் கவிதையின் போக்கில் இப்படி தன் சொந்தச் சோகத்தைச் சொல்லிக் கொண்டு போகிறார். பேசாமல் பேசும் பெரும் வித்தையை, அந்த வார்த்தைகள் கவிதையில் செய்து காட்டுகின்றன. புரிந்தவர்கள் புரிந்து கொள்ளட்டும் என்று.

இந்த முன்னாள் காக்கிச் சட்டைக்காரரின் கவிதைகளில் எல்லாம் 'பசுமை'யின் இதத்தை அனுபவிக்க முடிகிறது.

ஊர் எல்லையில் மலையடி வாரத்தில் கையில் வாளேந்தி விழிகளில் வெறுப்பைக் காட்டி அய்யனார் சாமி, அந்தக் கிராமத்தைக் காவல் காக்கிறார்.

அந்தக் கிராமத்தில் அவர்களுக்கு ஒரு பூர்வீக வீடு இருந்தது. அந்தவீடு உடைந்து தகர்ந்து விட்டது. எனவே அந்த வீட்டை விற்று விட்டு, மேலும் வட்டிக்குப் பணம் புரட்டி, புதிதாக ஒரு வீட்டைக் கட்டி, அந்த வீட்டிற்குக் குடி போகிறார்கள்.

யார் செய்த புண்ணியமோ, அந்த வீட்டின் முன்புறம் விசாலமாகத் தழைத்து வளர்ந்து நிழல் பரப்பி, 'நல்வரவு' சொல்லி நிற்கிறது. பச்சைப் பசேல் என்ற புங்கை மரம் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புது வீட்டின் பார்வையை புங்கை மரம் மறைக்கிறதென்று, அம்மரத்தின் கொப்புகளை ஒருவன் வெட்டக் கிளம்பினான்.

*"புங்கை மரத்தின்*
*நட்டநடுக் கிளையொன்றில்*
*பறந்து போன குருவியோ, குஞ்சோ*
*திரும்பி ஒரு நாள் வருமென்று*
*அடைகாத்த சூடு தணியாமல்*
*காலக் கணிதம் காட்டி*
*காத்து நிற்கும் ஒரு கூடு"*

கவிதை இத்துடன் முடிந்து விடுகிறது. அவன் மரத்தின் கிளையை வெட்டாமல் விட்டதால்தான், மரத்தில் அந்தக் கூடு, அதாவது பறவையின் அந்த வீடு, இன்று அம்மரத்திலேயே இருக்கிறது.

பறவைகளும், மரம், செடி, கொடி போன்ற உயிரினங்களையும் நேசிக்கும் கவிஞரின் கவிதை உள்ளத்தை இத்தொகுப்பில் உள்ள பல படைப்புகளில் வாசகர்கள் காண முடியும். 'வீடும் கூடும்' என்ற தலைப்பு, இந்தக் கவிதைக்கு மிகப் பொருத்தமாகச் சூட்டப்பட்டுள்ளது.

இதே போல், "சுட்ட பழமும், சிறு கை அளாவிய கூழும்" என்ற தலைப்பும், அக்கவிதைக்கு மிக அருமையாகப் பொருந்துகிறது.

'மனுதர்மம், மனுநீதி
மக்களுக்கு மட்டும் தானா?
மரங்களுக்கு மட்டும்
மறுக்கப்படுமா மரநீதி?'

என்று ஒரு கவிதையில் கேட்கிறார் கவிஞர். மனுதர்மம், மனுநீதி பற்றிய மறுபரிசீலனைகள் ஒரு புறம் இருந்தாலும், 'மரங்களுக்கு என்று ஒரு நீதிநெறி வேண்டும் என்று குரல் கொடுக்கிறார் கவிஞர். 'மரக்குருதி' என்று புதியதொரு வார்த்தையையும் உருவாக்கித் தமிழுக்குத் தந்துள்ளார் கவிஞர்.'

'பாலுண்ணிகள்' என்ற கவிதையில்,

'சங்கரன்கோவில்
புற்றுமண் எடுத்துப்
பூசினால் போய்விடும்'

என்ற நாட்டார் நம்பிக்கையும்,

'தலைமுடி எடுத்து
பாலுண்ணியின் கழுத்தில்
அழுத்திக் கட்டினால்,
அகன்றுவிடும்'

என்ற நாட்டார் மருத்துவ முறையும் பதிவாகியுள்ளது. இக்கவிதை, கவிதை மொழியில் அமைந்த ஒரு சிறுகதை போல் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்து மக்களுக்கும் தபால்காரர்களுக்கும் இருக்கும் உறவு, அலாதியானது. எழுதப் படிக்கத் தெரியாத கிராமத்து மக்களுக்கு, கடிதங்கள் எழுதிக் கொடுக்கும் தபால்காரர்களையும், வந்த கடிதங்களை வாசித்துக்காட்டும் தபால்காரர்களையும், நான் பார்த்திருக்கிறேன். அந்த உறவு பாலுக்கும் தண்ணீருக்குமான உறவு போன்றது. இன்றைக்குக் கூரியர் தபால்களைத் கொண்டு வருகிற இளைஞர்கள் (நாளுக்கு ஒருவர்) கிராமத்து மக்களிடம் பழகும் விதம் மிக செயற்கையானதாக எண்ணைக்கும் தண்ணீருக்குமான உறவுபோல் இருக்கிறது. அவர்கள் அவசர கதியில் மோட்டார் பைக்கில் ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். இந்த அனுபவத்தைக் கவிஞர்,

*'எப்போதும் வருகிற*
*தபால்காரரிடம் இருந்த*
*சிநேகம்,*
*எப்போதாவது வந்து போகிற*
*கூரியர்காரரிடம் இல்லை....'* என்ற கவிதையில் பதிவு செய்துள்ளார்.

"சிகையலங்கார சிநேகிதனே!" என்ற கவிதையின் தலைப்பு, சிகையலங்காரம் செய்கிற கலைஞனைச் சிநேகிதனே என்று அழைக்கிறது. விளிம்பு நிலையில் வாழும் அக்கலைஞர்களைப் பற்றி மிக கௌரவமாகப் பேசுகிறது அக்கவிதை.

இப்படி இத்தொகுப்பில் உள்ள கவிதைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போனால், இவ்வுரை நீண்டு கொண்டே செல்லும் என்று நினைக்கிறேன்.

புறா, பெருச்சாளி, பெட்டைநாய்க்குட்டி, கோழிக்குஞ்சு, சிட்டுக்குருவி, எறும்புகள் என்று பல்வேறு சிற்றுயிர்களைப் பற்றி வாஞ்சையுடன் இத்தொகுப்பில் உள்ள பல கவிதைகள் பேசுகின்றன. இயற்கை சார்ந்தும், பல்லுயிர் சார்ந்தும் பூமியின் சமநிலையைக் காத்து, இந்தப் பூமிப்பந்தைக் காக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடனும் (அக்னிக்கோளம் ஆகும் பூமி) இக்கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன.

மனித குலத்தின் மீதும், சுற்றுச் சூழல் மீதும், பசுமை நேசம் குறித்தும் ஆர்வமும் அக்கறையும் கொண்ட இக்கவிஞரின் படைப்புகள், கவித்துவத்துடனும் ஜொலிக்கின்றன.

இதுவரை நெருக்கடியான பணிச்சுமையில் இருந்த கவிஞர், இப்போது அரசுப்பணியில் இருந்து ஓய்வு பெற்று விட்டதால், இனி தொடர்ந்து கவிதைக் கலைக்கும், கலை இலக்கியப் பெருமன்றத்தின் செயல்பாடுகளுக்கும், தன்னை ஒப்படைத்துக் கொண்டு, தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டு செய்ய வேண்டுகிறேன். தமிழ் ஆர்வலர்களும் கவிதை ரசிகர்களும் இக்கவிதைத் தொகுப்பை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

கமுநீர்குளம்　　　　　　　　　　அன்பன்

24.08.2008　　　　　　　　　　**கழனியூரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் ஒரு வேண்டுகோள்

இரவீந்திரபாரதி,

417-3, பாரதியார் நகர்
அரூர் - 626 903.
94421 58086.

அன்பிற்கினிய கவிஞர். பேனா. மனோகரன் அவர்களுக்கு,

வணக்கம்.

மக்கள் தொலைக்காட்சியின் 'கவிமழை' நிகழ்ச்சியில் 7-12-2007-இல் நீங்கள் வாசித்த கவிதைகள் கிடைத்தன. முழுதும் படித்தேன். கிராமத்து மண் வாசனை உங்கள் மனதில் படிந்து இருப்பதையும், அந்த மண் வாசனை நகரப்புழுதியுடன் கலக்கும் போது உண்டான நாற்றத்தையும் அதன் சூட்டையும் இயல்பாகவே வெறுக்கும் மனோநிலையும் உங்கள் கவிதைகளில் பளிச்சிடுகிறது.

கிராமத்தின் சாயல்கள், ஆறுகள், மரங்கள், பறவைகள், அங்கு வாழும் எளிய மனிதர்கள், அவர்களின் மூச்சாய் உயிர்க்கும் பாடல்கள், கதைகள் இவற்றின் சாரத்தை, நகரத்தின் செயற்கையில் மனம் சலிப்பதைக் கவிதையில் அருமையாக வடித்திருக்கிறீர்கள். உங்கள் ஈரமனமும், பரந்த பார்வையும், கவிதையில் கொண்ட ஈடுபாடும் புரிந்து கொள்ள முடிகிறது.

பரபரப்பான வாழ்க்கை உங்களுடையது. கடுமையும், சட்டதிட்டங்களுமே தினசரி வாழ்க்கை என்ற சூழலில் மனதைப் பக்குவமாகக் கவிதைப் பக்கம் திருப்ப முடிகிறதே! கவிதையும் எந்திரத்தனமான வாழ்க்கையில் தென்றலை வீசவைக்கும் என்பதும் சரியே!

நிறைய நிறைய படியுங்கள். குறைவாக எழுதுங்கள். அதையும் நிறைவாக எழுதுங்கள், எழுதுங்கள், எழுதுங்கள். எழுதிக் கொண்டே இருங்கள் தினமும் எழுதுங்கள்! கவிதை நன்றாகவே வருகிறது! புத்தகமாக கொண்டு வாருங்கள்! வெற்றி பெறுவீர்கள்! வாழ்த்துக்கள்!

அன்புடன்

**இரவீந்திரபாரதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இலங்கையில் பிறந்து வளர்ந்த இந்தியக் குடிமகன் நான். சிங்களச் சூழலில் என் பால்யமும், யௌவனமும் பரிபக்குவம் பெற்றன. கால்பந்தும், கவிதையுமாக என் கல்லூரிப்பருவம். எல்லோருக்கும் போல அது ஒரு கனாக்காலம். 1976இல் இலங்கையிலிருந்து தமிழகத்திற்குப் புலம் பெயர்தல் நிகழ்ந்த போது அல்லது நிகழ்த்தப்பட்ட போது, கால்பந்து என்னைக் காவல் துறைக்குள் தள்ளிவிட்டது. 1969இல் என் முதல் சந்தக்கவிதை அச்சில் வெளியானது. 1972 முதல் தமிழகத்தின் புதுக்கவிதைப் பிரசுரங்கள் என் பள்ளிச் சிநேகிதன் அன்பு. ஜவகர்சா மூலம் படிக்கக் கிடைத்தன. அப்துல்ரகுமான், கலாப்பிரியா, பிரமிள், மீரா, மு.மேத்தா ஆகியோர் பிரமிப்பூட்டினார்கள். குறிப்பாக மு.மேத்தாவின் "தேசப்பிதாவிற்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி", "தீபம்" இதழில் வாசித்தபோது புதுக்கவிதையின் பால் மடை மாற்றம் செய்யப்பட்டேன். 1974இல் "வானம்பாடி"யில் ஒரு ஐந்து வரிக்கவிதை பிரசுரம் ஆனதும், 1975இல் "கணையாழி"யில் ஒரு பக்க ஸ்ரீலங்கா கவிதைகள் வெளியானதும் என் நண்பர்கள் மத்தியில் என்மீது கவனிப்பை ஏற்படுத்தின. 1976இல் நான் நிரந்தரமாக தமிழகம் புலம் பெயர்வது உறுதியானதும் நான் இல்லாமலே என் பால்ய சிநேகிதன், பள்ளித்தோழன் அன்பு ஜவகர்சா என் கவிதைகள் சிலவற்றைத் தொகுத்து "சுமைகள்" என்ற தலைப்பில் அ.யேசுராசா, திக்குவல்லைக் கமால் (இலங்கை) ஆகியோரின் அணிந்துரைகளுடன் ஒரு சிறு புதுக்கவிதைத் தொகுப்பினை வெளியிட்டார். இலங்கையில் ஆரம்ப காலத்தில் வெளியிடப்பட்ட புதுக்கவிதைத் தொகுப்புகளில் ஒன்று என இலங்கையின் புதுக்கவிதை வரலாற்றில் என் பெயரும் பதிவாக அது காரணம் ஆயிற்று.

*"வாழ்க்கையில் மட்டுமல்ல*
*படைப்பிலும்*
*வேதனைக் கோடுகளையே*
*ஆழமாகப் பதித்தாய்...*
*தூரத்தால் பிரியும்*
*எங்களது தோழனே*
*உன் திறமைக்காக*
*எங்கள் ஏழ்மை*
*இதைத்தான் செய்தது"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அன்பு. ஜவகர்சா எழுதிய வரிகள் இன்று வாசித்தாலும் கண்களில் கண்ணீரை வரவழைக்கும்.

1976இல் அதிகாரக் கோரைப் பற்கள் முளைத்ததினால் 2000 வரை அடையாளம் இழந்தும், இலக்கு மறந்தும் அல்லாடியது இந்த அகதிப்பறவை. புலம் பெயர்ந்த தமிழகச் சூழலில் சகோதர, சகோதரிகளை நிலை நிறுத்த "நல்ல போராட்டத்தைப் போராடினேன்". ஆனாலும் கவிதை வாசிப்பும், நேசிப்பும் எனக்கு நல்ல இளைப்பாறுதலைத் தந்தது. எழுத்தாளர்கள் கழனியூரன், ஜெகாதா, சந்திரகாந்தன், ஜனநேசன் ஆகியோரிடம் ஏற்பட்ட நெருக்கமும், 2005இல் தஞ்சை சுகனின் அறிமுகமும் மறுபடியும் என் கவிதைமையை மீட்டெடுக்கும் வல்லமையை எனக்கு பெற்றுத்தந்தது. இனிய உதயம் மா.முருகன் அவர்கள் என்னுடைய கவிதைகளையும், சில சிங்களக் கவிதைகளின் மொழிபெயர்ப்பு களையும் வெளியிட்டு என்னை பெருமைப்படுத்தி இருக்கிறார். தற்போது கலை இலக்கியப் பெருமன்றத்தின் மதுரை கிளை முன்னோடிகள் பேரா. தி.சு.நடராஜன், பேரா.சிவக்கண்ணன், பேரா.இராமசுந்தரம், பேரா.வே.சபாநாயகம், விருத்தாச்சலம் ஆகியோர் ஊக்கத்தாலும், தோழமைக்கவிஞர்கள் ஆனந்தகுமார், செல்லா, ஓரி ஆனந்தன், அழகுபாரதி ஆகியோரின் அந்நியோன்யத்துடனும் எழுதிக் கொண்டிருக்கிறேன். அல்லது எழுத வைக்கப்படுகிறேன். அதனால் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கம், மதுரை கிளையின் தலைவர் திருச்சி சந்தர் அவர்களும் என் எழுத்து ஊழியத்தில் வழிகாட்டுபவர். பிரிண்ட் ஹவுஸ் சுப.குழந்தை வடிவேலன் என்னை மதுரைக்கு அறிமுகப்படுத்தியவர்.

நல்ல அணிந்துரை நல்கிய தி.க.சி. அவர்கட்கும், பெற்றுத் தந்த கழனியூரன் அவர்கட்கும், கவிதைத் தொகுப்பை உருவாக்கம் செய்த முனைவர் ஆனந்தகுமார் அவர்களுக்கும், ஒளியச்சு செய்த ஆதனூர் சோழனுக்கும் என் நன்றிகள்.

பேரன்புடன்
**பேனா. மனோகரன்**
மதுரை.

தொடர்புக்கு:
செல்லிடப்பேசி எண் : 94435 61895
மின்னஞ்சல்:
penamanoharan@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

1) வானம்பாடி
2) கணையாழி
3) தினமணிக் கதிர்
4) இனிய உதயம்
5) கவிதை உறவு
6) சௌந்தர சுகன்
7) அறிக அறிவியல்
8) இனிய உதயம்
9) இனிய நந்தவனம்
10) தொடரும்
11) யுகமாயினி
12) தேசிய வலிமை
13) ஏழை தாசன்
14) பாரதி இலக்கியக் கழகம், திருப்பத்தூர்
15) தமிழ்ச்சங்கம், இராமநாதபுரம்
16) கீழக்கரை கிட்டங்கிச் சகோதரர்கள்
17) திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை வானொலி நிலையங்கள்
18) மக்கள் தொலைக்காட்சி
19) மதுரை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மண்டல மேலாளர் மற்றும் ஊழியர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை எழுத்தில் நிறுத்திய
பால்ய சிநேகிதன்
அன்பு ஜவகர்சாவிற்கு
[அநுராதபுரம், இலங்கை]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்றைத் திங்கள்

ஓடுகள் வேய்ந்த அந்த
ஓட்டை வீட்டில்
குடியிருந்த காலம்
ஓவியமாய் மனதிற்குள்

உடைந்த ஓடுகளினூடே
சூரிய ஒளிக்கதிர்கள்
சுழலும் துகள்களுடன்
தரைக்கும் ஆகாயத்திற்கும்
தகவல் தொடர்பை ஏற்படுத்தும்.

மழைக் காலங்களில்
காலை மழைக்கு கிழக்கிலும்
மாலை மழைக்கு மேற்கிலும்
ஒழுகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகர டப்பாக்களை
எடுத்து வைத்து
அந்தக் காலத்திலேயே
அற்புதமாய் மழைநீர்
சேகரிப்போம் தம்பியும் நானும்

தரை ஈரமானால்
தூங்க முடியாது இரவென்று
துயர்படுவாள் அம்மா.

காலப் பெருவெளியின்
கடினப் பயணத்தில்
எங்கள் வீடும் ஏன்
எல்லா வீடுகளுமே
காங்கிரீட் கூரைகள் ஆயின:
வானத்திலும் யாரும்
காங்கிரீட் கூரைகளைக்
கட்டினார்களோ என்னவோ
வானத்தில் மழையும் இல்லை
காங்கிரீட் கூரைகளில் ஒழுக்கும் இல்லை.
கவலைப்பட அம்மாவும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றறிந்த காக்கைகள்

முன்பு வந்த
காக்கைகள் எல்லாம்
போட்டதைப்
பொறுக்கித்தின்றே போயின.

இப்போது வரும்
காக்கைகளோ
கொல்லைக் கதவு
திறக்காவிட்டால்
கருவேல் மரத்திலிருந்தோ
காம்பவுண்டுச் சுவற்றிலிருந்தோ
'கசிந்து கண்ணீர் மல்கி'க்
கரைகின்றன.

கதவு திறக்காவிட்டாலும்
சன்னல் வழியே
சமையல் கட்டில் நுழைந்து
சோதனைகள் செய்து
சண்டித்தனம் பண்ணுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமண்டலம் கவிழ்த்த
காக்கைகளாக்கும் நாங்கள் என்பதுபோல
கலகம் செய்கின்றன.

இரை ஏதும் கிடைத்தால்
இனிய வாழ்த்துச் சொல்லி
இசை பாடிப் பறக்கின்றன:
இல்லாவிட்டால் ஏளனமாய்
ஏசிவிட்டுப் பறக்கின்றன.

கபடமுள்ளவைகள் என்றா
காக்கைகளைச் சுட்டுகிறீர்கள்
இல்லை: கிடைக்கும் உணவை
கமுக்கமாக அமுக்கக்
கற்றுக் கொள்ளவில்லை
அவைகள் இன்னும்.

பிண்டத்தைக்
கண்டதும்
அவைபோடும்
களேபரக் கூச்சலில்
நாய்களும் கோழிகளும்
ஓடிவந்து அவைகளை
ஓட்டமெடுக்கச் செய்கின்றன.

கோழிகளும் நாய்களும்
கொண்டது போகச்
சிந்திச் சிதறியதை
அணில்கள் வந்து
அள்ளிச் செல்வதை
எட்ட இருந்தே
அமைதியாகப் பார்த்துப்
பறக்கின்றன
கற்றறிந்த காகங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி அணில்கள்

புகலிடம் தந்த
பூமித்தாய் மடியில்
பூக்களைத் தூவி
பெருமைப்படுத்தி இருக்கிறது
புலம் பெயர்ந்த புங்கை மரம்.

புங்கை மரக்கிளைகளில்
பூங்காரயில் ஓட்டி மகிழும்
அகதி அணில் குஞ்சுகள்
மரணபயம் இல்லாமலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடும் கூடும்

**ஊ**ர் எல்லையில் மலையடிவாரத்தில்
கையில் வாளேந்தி
விழிகளில் வெறுப்பைக் காட்டி
அய்யனார் காவல் காக்கும்
எங்கள் கிராமம். . .

பூர்வீக வீடு
புழக்கத்திற்கு ஆகாதென்று
வந்த விலைக்கு விற்றுவிட்டு
போதாதற்கு
அங்கே இங்கே வட்டிக்கு வாங்கி
புரட்டிப் போட்டு
புதிதாகத்தான் குடிபுகுந்திருந்தோம்
அந்தப் புதிய வீட்டில். . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் செய்த புண்ணியமோ
வீட்டின் முன்புறம் விசாலமாக
தழைத்து வளர்ந்து நிழல் பரப்பி
நல்வரவு சொல்லி நின்றது
பச்சைப் பசேலென புங்கை மரமொன்று. . .

புதுவீட்டின் பார்வையை
புங்கை மரம் மறைக்குதென்று
கிளைகளை நறுக்கவென்று
கிளம்பினான் அருமை மகன். . .

புங்கை மரத்தின்
நட்டநடுக் கிளையொன்றில்
பறந்துபோன குருவியோ, குஞ்சோ,
திரும்பி ஒருநாள் வருமென்று
அடைகாத்த கூடு தணியாமல்
காலக் கணிதம் காட்டி
காத்து நிற்கும் ஒரு கூடு !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுட்ட பழமும்
# சிறு கை அளாவிய கூழும்

**வீ**திமுனையில்
மறைந்துபோன
ஐஸ் வியாபாரியை
விரட்டிப் போய்
தம்பிக்கும் தனக்குமாய்
இரண்டு குச்சி ஐஸ் வாங்கி
குதூகலம் கொப்பளிக்க
நிலவை எட்டிப் பிடித்த மகிழ்ச்சியில்
குதித்து வந்தாள் என் செல்ல மகள். . .

தனக்கான ஐஸ் என்பதால்
அவசரத்தில் ஆவல்மீதூர
ஏற்கனவே வாயில் வைத்து
எச்சில்படுத்தி இருக்கவேண்டும்
ஒன்றை அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம் போல் பத்திரிக்கையில்
புதைந்து போய் இருந்த நான்
மகளின் கோலாகலம் கண்டு
மோன நித்திரை கலைந்தேன். . .

அப்பாவுக்கொன்னு
தா என்று கேட்டேன்
தம்பிக்கும் சேர்த்து அவள்
தன் கையில் வைத்திருந்ததை
அறியாமலேயே

“எச்சி(ல்) பட்டது இது
எச்சி(ல்) படாதது இது
எது வேண்டும்?” - என்றாள்
அவள் முகத்தின் பிரகாசம்
பின்னணியில் ஒளிவட்டமாய்

எச்சில் படாததையே
எனக்குக் கொடென்றேன்

“கொழந்த எச்சி(ல்)
கூடாதா அப்பா” என்றாள்; அடடா
குறள் தெறிக்கும் குரல். . .
நெஞ்சில் கனிகிறது
சுட்டபழமும்
சிறுகை அளாவிய கூழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை

நினைவு நாய்க்குட்டிகள்
மன நித்திரையைக்
கத்திக் கலைக்க...
சிந்தனைத் தாய் நாய்
நக்கிக் கொடுக்கும்
வெண் சூட்டில்
அமைதிப் பிரவாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்புடீம்மா?

கறுப்பு டிரவுசரிலே
கலர் கலராத்தான்
ஒட்டுப் போட்டிருக்கியே
இதப் போட்டுக்கிட்டு
எப்புடீம்மா பள்ளிக்குப் போவேன்?

ஒவ்வொருத்தனும்
புதுச் சொக்காய் போட்டுக்கிட்டு
என்னுதத் தொட்டுப்பாப்பானுவ
கை கொட்டிச் சிரிப்பானுவ
நான்...
எப்படீம்மா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேப்ப மரத்திடம் ஒரு விசாரணை

கிராமத்து முச்சந்தியில்
சடைத்து வளர்ந்து
ஊருக்கு நிழல் கொடுத்த
வேப்ப மரம் ஒன்று - ஏனோ
வெட்டப்பட்டது.

முகம் சிதைத்த
மூர்க்க மனிதர்களின்
முட்டாள்தனம் எண்ணி
மூளியாய் முணகுகிறது.

சூர்ப்பனகை நிலைகண்ட
இராவணனைப் போல்
எனக்குள் ஒரு மனக்கலக்கம்

மனுதர்மம், மனுநீதி
மக்களுக்கு மட்டும்தானா?
மரங்களுக்கு மட்டும்
மறுக்கப்படுமா மரநீதி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று
தேர்க்காலில்
கன்று கொன்ற
தேர்ந்த இளவலுக்கு
ஆராய்ச்சி மணி இழுத்து
போராட்டம் நடத்தி
நியாயம் கேட்டதாமே
தாய்ப்பசு.

விசனமுற்றிருந்த
வேப்பமரத்தை
ஆறுதல் படுத்துதற்காய்
ஆரம்பித்தேன் விசாரணை.

கிளையெல்லாம்
மரக்குருதி
மணந்து வழிய
வேப்பமரம் தன்
வேதனையைச் சொல்லியது.

உழைத்துக் களைத்த மனிதர்கள்
சாயுங்காலங்களில்
நிழல் கொடுத்துச்
சுகம் கொடுத்த
வேப்ப மரத்தில்
சாயங்காலங்களில்
காக்கைகளும், வெளவால்களும்
கரைந்தும், இரைந்தும்
இடைஞ்சல் செய்கிறதாம்.

அதனால்தான்
அரிவாளும் கோடரியும்
ஆக்ரோஷமாக வீசப்பட்ட தாம்
அங்கங்கள் சிதைக்கப்பட்டதாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகின்ற வேப்பமரத்தை
ஆசுவாசப் படுத்த முடியாமல்
அயர்ந்து திரும்பினேன்.

வேப்பமரம் என்னை
"நில் மனிதா" என்றது,
"ஊருக்குள்ளே தினம்தினம்
கூம்புக்குழாய் கூடுகட்டியும்
ஆளுயரப் பெட்டி வைத்தும்
கூட்டம் கூட்டி
அடாவடி செய்யும்
மனிதக் காக்கைகளும், வௌவால்களும்
அதிகம் இருக்குதே
எதை வெட்டுவாய் மனிதா
எப்படித் துரத்துவாய் மனிதா"-என்றது!

வேப்பமரம் இப்போது
என்னை விசாரிப்பதுபோல
எனக்குத் தோன்றியது;
என் இயலாமையைப்
புரிந்து கொண்டதோ என்னவோ
"இன்றுபோய் நாளை வா" என்று
இங்கிதமாய்ச் சொன்னது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலுண்ணிகள்

முதல் வர்ணம் படைக்கப்பட்டதாய்
முத்திரை குத்தப்பட்டிருக்கும்
மொகரக்கட்டையின்
மேடு, பள்ளங்களில்
திடீரென்று ஒரு நாள்
பருவோ, பாலுண்ணியோ
மழைக் காலத்துப் புதுப்புற்றாய்
முளைவிட்டிருந்தது.

நாளொரு கிளையும்
பொழுதொரு கூடுமாய்
வேரோடி வளர்ந்து
வெற்றிக் கொடி ஏற்றியிருந்தன
பாலுண்ணிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவரவேளைகளின் போதுமட்டும்
தவறி நேரும் கீறல்களில்
சிவப்புக் கசிவுகள்-சிலவேளைகளில்
கொப்பளித்தும் கூடியது குருதி

சங்கரன்கோவில்
புற்றுமண் எடுத்துப்
பூசினால் போய்விடும்,
பூசாரி சொன்னார்.

தலைமுடி எடுத்து
பாலுண்ணியின் கழுத்தில்
அழுத்திக்கட்டினால் அகன்றுவிடும்
அனுபவம் சொன்னான் நண்பன்.

ஊதுவத்தி காட்டி
மெதுவாய்ச் சுட்டால்
ஒன்றுமில்லாமல் போகும்
என்றான் இன்னொருவன்

அலோபதி மருத்துவரிடம்
ஆலோசனை கேட்டேன்
எக்ஸ்ரே- ஸ்கேன்- டெஸ்டுகள்
இத்தியாதி இல்லாமல்
ஆயிரம் ரூபாயும் தேதியும் குறித்தார்
இலகுவானதும் நவீனமானதுமாம்
லேசர் சிகிச்சை.

பாலுண்ணிக்காய் நான்
படாத பாடு படுவதைப் பார்த்து
பரிதவித்து ஒரு நாள்
தற்கொலை செய்து கொண்டன பாலுண்ணிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள்

எப்போதும் வருகிற
தபால்காரரிடம் இருந்த சிநேகம்
எப்போதாவது வந்து போகிற
கூரியர்காரரிடம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிக்கும் வேதனைகள்

களவெடுத்த முத்தங்கள் தித்திக்கும்
இன்பங்கள் இனிக்கும்
காலத்தின் போக்கில்
மனச்சாட்சிக் கூட்டில்
கறையான்கள் புற்றெடுக்கும்

(வானம்பாடி - 1974)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்னிக் கோளம் ஆகும் பூமி

காணாமல் போய்விட்டன காடுகள்
மணல் உறவுகள்
மழிக்கப்பட்டதால்
ஆறுகள் அனைத்தும் அநாதைகளாய். . .

எந்தையும் தாயும்
மகிழ்ந்து குலாவிய
குன்றுகள் எல்லாம் குவாரிகளாய். . .

நெல் விளைந்த வயல்களில்
கல் விளைந்து கட்டிடங்கள். .
மல்லிகை, மஞ்சள் பதியன்களை
மறைத்துவிட்டு இறால் பண்ணைகள். . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரும்புத் தோட்டங்கள்
இருந்த இடங்களில்
இரும்புத் தொழிற்சாலைகள். .

கழனிக்கடியில்
கசிகிறது கடல்நீர்
உவர்நிலம் ஆகிறது ஊர். . .

குடிப்பதற்கு குடிநீரும் இல்லை
இளநீரும் இல்லை
குளிர்பான விளம்பரங்கள்
குறும்பாய் கண் சிமிட்டும். . .

இணைய தளங்களும்
ஈ-மெயில்களும்
சிக்கெனப் பற்றிக்கொண்டதால்
இளைய தலைமுறையின்
இதய தளங்களில்
இல்லாமல் போய்விட்டது ஈரம். . .

மறுபடியும்
அக்னிக்கோளம் ஆகிறது
பூமி. . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையின் இரங்க ராட்டினம்

பூத்திருக்கும்
புங்கை மரத்தைப் பார்த்து
பூரிப்பாய் வேர்த்திருக்கும்
வேப்ப மரம்.

உதிய மரம் கூட
உரசிக் கொண்டே
உல்லாசப்படும்.

தகத்தகாயமாய்
தங்க அரளிகளின்
தீபாராதனைகள்.

அக்னித் தூக்கலாய்...
ஆகாயத்திற்கு அர்ச்சனை செய்யும்
இட்லிப் பூக்கள்.

இந்த அதிசய இயற்கை வளையத்துக்குள்...
மரங்களுக்கும் மாடிக்குமாய்
வட்டமிட்டு வருகின்றன
அணில்கள், பச்சோந்திகள்
பட்டாம்பூச்சிகள், இன்னும்
விதம்விதமாய் விநோதக் குருவிகள்.

அடடா......இஃது
இயற்கை நங்கை நடாத்தும்
இரங்க ராட்டினம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகரமும் நரகமும்

மூச்சிரைத்தபடியே அல்லது
மூச்சைவிட்டு விடப்போவது போல்
அச்சுறுத்தியபடியே
வந்து நின்றது அது.

எதிர்பார்த்துக் காத்திருந்தோரையும்
எங்கெங்கோ பார்த்துக் கொண்டிருந்தோரையும்
அங்கும் இங்குமாக
அலைக்கழித்து ஓடவைத்தது.

எது, எப்போது, எங்கே
எப்படிப் புறப்படுமென்று
எவருக்கும் தெரியாது?

நகர்ந்தும், நகராததுபோல்
நரகமாய் இருக்கிறது - இந்த
மாநகர வாழ்க்கை -
நகர்ப் பேருந்துகளைப் போலவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதமும் கவிதையும்

அரும்பு மீசை
முளைப்பதற்கு முன்பே
கவிதைக் கடை விரிக்க
ஆரம்பித்த போது
பங்குபெறும் இதழைப் பாராட்டி
கடிதம் ஒன்று எழுதுவது
அப்படி ஒன்றும்
கடினமான காரியமாக
இருந்ததில்லை:
காலப்போக்கில்
காணாமல் போனது
கடிதங்கள் மட்டுமல்ல
கவிதைகளும்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படித்தான் பொழுது விடியும்

காகங்கள் தமக்காகத்தான்
விடிந்தது போல
ஆரவாரித்துக் கரையும்

கோழிகளும், சேவல்களும்
குடும்பத்தினர் விழித்தால்தான்
கொத்த ஏதாவது
கிடைக்குமெனக் கூவும்.

மடிநிறையப் பாலை வைத்துக் கொண்டு
இந்தா பிடி என்பதுபோலப்
பசு கதறும்: கன்று மோதும்

காலங்காத்தால வேலைக்குப் போகும்
அண்ணனுக்காய் தண்ணி வைக்கத்
தலைகளைத் தாண்டிப் போவாள் தங்கை.

இவ்வளவு பாரத்தையும்
என்னால் எப்படித் தாங்கமுடியும்
என்பது போல்
திண்ணையில் படுத்திருக்கும்
அப்பாவின் குறட்டையொலி
செவிப்பறையில் இறங்கிச்
சிந்தனையை நெருடும்.

எப்படி எப்படியோ
முடிந்த பின்பும் மறுநாளும்
மறுபடியும் இப்படித்தான்
விடியும்.

(கணையாழி - 1975)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ இனிது...

கீழ்வெண்மணியில்
ஏர்வாடியில்
தருமபுரியில்
கோத்ராவில்
குடந்தையில்
பானிபட்டில்
ஈழத்தில்
ஈராக்கில்
பூமிப்பந்தின்
எங்காவது ஒரு மூலையில்
எரிதலும் உயிர்த்தலுமாய்
நிகழ்ந்து கொண்டிருக்கிறது
மனித ஜீவிதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறாக்களும் பெருச்சாளிகளும்

பின்வீட்டுப் புறாக்களுக்கு
என்வீட்டுக் கொல்லைப்புறமே
மேய்ச்சல் நிலம்.

இராணுவ ஹெலிகாப்டர்களின்
இலாவகத்துடன் - இரை
தாக்குதலுக்காக அவை
தரை இறங்குவதும்
வேட்டை முடித்து மறுபடியும்
மொட்டை மாடிக்கு விரைவதும்
மொழிபெயர்க்க முடியாத மோகனம்.

சில நாட்களாகக்
கொல்லைப் புறத்தில்
பெருச்சாளிகளின் தொல்லை.

பெருச்சாளிகளைப் புறம்காண
வாங்கிவந்தேன் எலிப்பாஷாணம்.

இரவில் வரும்
பெருச்சாளிக்காய்
பகலில் வரும் புறாக்களை
பணயம் வைக்க வேண்டாம்
என்கிறாள் தர்மபத்னி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெட்டை நாய்க்குட்டி

அநாதியான ஆண்டவனின்
அற்புதப் படைப்பொன்று
அநாதையாய் அலைகிறது
அந்தத் தெருவில்

கர்ப்பப்பை
வாசனை கலைந்து
கண் திறக்கு முன்னே
கறுப்பும் வெள்ளையுமாய் - அது
கறைபட்ட பஞ்சுப் பொதியாய்
போவோர் வருவோர்
கால்களையெல்லாம்
கட்டிப் பிடித்து
நக்கி நனைக்கிறது

ஆவலோடு அள்ளி
அரவணைத்துத் தூக்கியவர்கள்
அடிவயிற்றில்
அடையாளம் கண்டு
அப்படியே இறக்கிவிட்டுப்
போயே போய்விட்டார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலை

**கா**ளிக்கூத்துக் கதைகள்
கிராமப்புறங்களில்
ஊழிக் கூத்துகளின்
உருவகங்கள் புராணங்களில்
ஆழிக்கூத்து நிகழ்த்திய
அனர்த்தங்கள் யாவும்
கேலிக் கூத்தாக்கின
நெய்தல் நில வாழ்வை.

ஊழிக்காலமாய்
அலைவீசும் கடல்தாயின்
அடிவயிற்றில் வலைவீசி
அள்ளி வந்தான்
மழலை மச்சங்களை மனிதன்.
பொறுத்துப் பொறுத்துப் பார்த்து
வெறுத்துப்போன ஆழித்தாய்
"சுனாமி" என்றொரு
சுழல்வலை வீசினாள்
சுருண்டு மடிந்தன
மனித மீன்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவாடுகள் காய்ந்த நெய்தல் நிலங்கள்
சுடுகாடும் இடுகாடும் ஆயின
சோகத்தில் மூழ்கியது மானுடம்

குஜராத், குடந்தையைத் தொடர்ந்து
கூற்றுவனின் கூலிப்படையின்
கோரதாண்டவம் கிழக்குக் கடற்கரையில்

சூரசம்காரத்தின்
சரித்திரம் தெரியும்-இந்த
ஈரசம்காரத்தின்
இதிகாசம் என்ன?

வலைகள் கூட
மீன்குஞ்சுகளைப்
பிழைத்துப்போ என்று
வழிவிடுமே
அலைகளே... நீங்கள்.
எங்கள் பிஞ்சுகளுக்கு
இழைத்தது
பெருத்த அரக்கத்தனம்

இயற்கைக் கோள்களின்
இனிய இரகசியங்களை
செயற்கைக் கோள்கள்
முற்று முழுதாக
மொழி பெயர்த்துவிட முடியாது
என்பதுதான்
மானுடத்திற்கு விடப்பட்ட சவால்
புதை குழியினின்றும்
புறப்படும் பீனிக்ஸ் போல்
வெளிப்படும் மானுடத்தின்
வெற்றி வேட்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவரை
பஞ்ச பூதங்கள் என்னும்
பஞ்ச பாண்டவர்களை
மாசுபடுத்தும்
மாய மானுடக் கௌரவர்களை
கொஞ்சம் மட்டுப்படுத்துவோம்

கண்ணில் நீர்வரலாம்
கடல் வரலாமா? வந்தது
வாழ்க்கையையும், வாழிடங்களையும்
வாரிச் சுருட்டிப் போனது

கடலில் மூழ்கிப்
காணாமல் போய்விட்டவை
என் கவிதைகளும்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழிக்குஞ்சு

**கா**கத்தினதோ கருடனதோ
கடிவாயினின்றும் தப்பிய
கோழிக் குஞ்சொன்று-எங்கள்
கொல்லைப் புறத்தில்
வந்து விழுந்தது.

மரணத்தின் விளிம்புவரை
சென்று வந்ததாலோ என்னவோ
வந்தநாள் முதலாய்
என் பிள்ளைகளின்
கைகளுக்குள் சிக்காமல்
சந்து பொந்துகளில் எல்லாம்
ஓலமிட்டே ஓடி ஒளிகிறது.

கூடையில் அடைக்க முயன்றாலும்
குறுநெல்லோ, தானியமோ
கொறிக்கப் போட்டாலும்
கூக்குரலே கேட்கிறது. . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைக் கோழியின்
அரவணைப்பை இழந்த
கோழிக்குஞ்சின் கூக்குரல் கேட்கிறது. . .
கோவில் மணியாய்

ஆயாசமாய அமந்திருக்கும் போதோ இல்லை
அசந்து தூங்கும் போதோ
காலில் அல்லது தோளில் ஏறி
தொட்டில் ஆடுகிறது
கோழிக்குஞ்சு . . . . .
இரைதேடும் எண்ணம்
எதுவும் இல்லாமலே. . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள்

நீ எழுப்பிய ராகமாலிகைகள்
இன்னும் தான் கேட்கின்றன
ஏரியல், கம்பிகள் எதுவும் இல்லாமலே
மனம் உன் மன்மத ராகங்களை
உள் வாங்குவது விந்தைதான்
விசித்திரமான ஒளிபரப்பும் ஸ்தாபனம் நீ
கண்களைத் திறந்து கொண்டால்தான்
காட்சி எதுவுமே தெரியும்; ஆனால்
கண்களை மூடிக் கொண்ட போதும்கூட
என் மன டெலிவிஷனில்
உன் நிழல் விழுகிறது.
அணைப்பதில் அல்ல அன்பே உன்னை
நினைப்பதில்தான் சுகமே இருக்கிறது
அதனால்தான் தொலைவில் இருந்தாலும்
எனக்கு மிக அருகே இருக்கிறாய்.

*(கணையாழி - 1980)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்தமனம்

**வா**னப் பையன் உற்சாகமாக
உதைத்துத் திரிந்த சூரியப்பந்து
மலைப் பையன் வாசலுக்கு
வந்து விழுந்ததும்
எடுத்து மறைத்துக் கொண்டான்;
ஆத்திரம் தீர அடம்பிடித்து
அழுது அழுது முகம் சிவந்து
இருட் போர்வையை இழுத்துமூடி
உறங்குகிறான் வானப் பையன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் சிகையலங்கார சிநேகிதனே

ஆதி மனிதனை
முழு மனிதனாக்கிய
அற்புத பிரம்மாக்களின்
வமிசாவளி நீங்கள்.

படியாத முடிகூட
உங்கள் கைபட்டால்
படிகிறதே எப்படி?

முடியாட்சியை
மூர்க்கமாக எதிர்த்தவர்கள்
முடங்கிப் போனார்கள்;
எனக்குத் தெரிந்து
இன்றும்
'முடி' ஆட்சியை எதிர்த்து
தொடர்கிறது உங்கள்
குருசேத்திரப் போர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தரிக்கோலும், கத்தியும் இருப்பதால்
நீங்களும் மருத்துவர்தான்;
"அந்தச் சோதனை, இந்தச் சோதனை"
அடிக்கடி பண்ணச் சொல்லாத
அன்னியோன்னிய மருத்துவர் நீங்கள்.

முடியில் உங்கள்
கைபட்டாலும்
மை பட்டாலும்
இளமை திரும்புகிறதே;
கண்ணுக்குத் தெரியாத
காயகல்பம் நீங்கள்.

அம்மாவுக்கப்புறம்
நண்பனுக்குப்புறம்
மனைவிக்கப்புறம் - என்
குழந்தைகளுக்கப்புறம்
உங்கள் தொடுகையில்தான்
இறக்கை கட்டிப் பறக்கிறது - என்
இளைய மனசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டுக்குருவியின் சந்தோஷம்

முன்பெல்லாம்
சிந்தியும் சிதறியும் கிடக்கும்
சிறுமணிகளைச் சிறு அலகால்
கொத்தவும் கொறிக்கவுமே
சிட்டுக்குருவிகள் வரும்.

ஜன்னல் கம்பிகளும்
வெண்டிலேட்டர் கம்பிகளுமே
அவற்றிற்கு
விருப்பமான விளையாட்டு மைதானம்.

இப்போது வரும்
சிட்டுக் குருவியோ
நேராக
முகம் பார்க்கும் கண்ணாடியில்
தன் முகம் பார்த்துக் கொள்ளவே
வருகிறது.

சுய தரிசனம் கிடைத்துவிட்ட
சந்தோஷத்தினாலோ என்னவோ
கண்ணாடியைச் செல்லமாய்
இரண்டு முத்தமிட்டு
பறக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனச் சிறைகளில் சீதைகள்

**வா**லிப வாகனங்கள்
உற்பத்தி ஸ்தா(ப)னங்களை விட்டு
வெளியேற முடியாமல்
அங்கேயே உறங்குகின்றன.

“காட்சி”க்கு வைக்கப்பட்டவை
கடைசிவரை
கைபடாமலேயே
இருக்கின்றன.

பார்த்தவர்களால் கூட
“பேரங்கள்” மட்டும்தான்
பேசப்பட்டன;
“பாரங்கள்” இன்னமும்
பூர்த்தி செய்யப்படவே இல்லை.

ஆயினும் - குறை
வண்டிகளிலில்லை
“தொடுக்கல் வாங்கலில்” தான்.

(கணையாழி - 1983)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேம்பு

**வீ**ட்டின் முன்பாக
வீரியம் காட்டி நிற்கிறது
வேதாளங்களால் வீழ்த்தப்பட முடியாத
வேப்பமரம்.

செடியாய் இருந்து
உயரும் போதே
பக்கக் கணுக்களைப்
பதவிசாகக் கிள்ளி
நேராக வளர்த்தால்
பெரிய மரமானதும்
பலகைக்காகும் என்று
புலவர் சேரி மாமா
தொழில்முறை அனுபவம் சொன்னார்.

வேர்க்கால்கள்
அஸ்திவாரங்களை ஊடுருவி
கட்டிடத்தை சேதப்படுத்துமென்றும்
சேதி சொல்லினர் சிலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணில்களின்
தொடர் வண்டிப் பயணத்திற்கு
இருப்புப் பாதையாக இருந்தது
வேப்ப மரம்.

மின்வாரியமும்,
தொலைபேசி இலாகாவும்
துண்டித்தது போக
சுய உதவிக்குழு உபயமாய் வந்த ஆடுகளுக்கு
வேப்பிலை ஒடிப்பாரும் உண்டு.

ஆண்டுகள் சில உருண்டோடியபின்
வீட்டின் விரிவாக்கத்திற்காய்
பக்கக் கிளைகளை
வெட்ட வேண்டிய
வேளை வந்தபோது
தரிசனமாகிறது
ஏதோ ஒரு
எருதுச் சாணத்தின்
காய்ந்த இடுக்கிலிருந்து
பச்சைப் பசுமையாய்
கோது பிளந்து அதன்
உயிர்த்தெழல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளும் காவலும்

இருப்பதுபோலிருக்கும்,
இருக்காது
இருக்காததுபோலிருக்கும்
இருக்கும்
கடவுளும், காவலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி முக(ா)ம்

முகம் விகாரம் ஆனால்
என்ன ஆகும்
முகாம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்புகள்

அடிக்கடி
எல்லைக்கோட்டை
மாற்றிக் கொள்கின்றனவே
என்னவகை எதிரிப்படை இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்து போகும் தொன்மங்கள்

**மா** மரங்களில்
மைனாக்களின்
மதனோற்சவங்கள்

தென்னை மரங்களின்
கிறீச்சிடும் கிளிகளின்
கலாசேத்திர நர்த்தனங்கள்

கொய்யா மரங்களில்
குருவிகள், குஞ்சுகளின்
குருகுலப் பயிற்சிகள்

வழிந்தோடும் வாய்க்காலில்
கெண்டைக் குஞ்சுகளின்
இராணுவ அணிவகுப்பு
சின்னஞ்சிறார்களின் நீர் விளையாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களத்து மேட்டில்
நாவல் மரத்தடியில்
நாகங்கள் காவல் காப்பதாக
மணியக்காரன்
மனைவி
மர்மக்கதை சொல்வதை
மயங்கியபடியே
கேட்போம் நாங்கள்

இப்படியாகத் தோப்பும் துரவுமாக
தோரணக் கோலாகலம் - எங்கள்
தொலைதூரக் கிராமம்

இப்போது
காங்கிரீட் கட்டுமான அறைகளில்
கண்ணாடித் தொட்டிகளில்
வண்ண மீன்களும்
கம்பிக் கூண்டுகளில்
காதல் பறவைகளும் சிறைப்பட்டிருக்க
தொலைக்காட்சி பெட்டிகளில்
தொலைந்து போயிருக்கின்றன
நான் பெற்ற செல்வங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தார்த்தனைத் தேடும் போதி மரங்கள்

அந்தக் கல்லூரி எதிரே
பழைய நூல் கைலாயம் அமைத்து
திரிசடைக் கடவுள் போல் ஒருவன்
திரிகிறானே கண்டாயா நீ?

நக்கீரப் பேராசிரியர்களிடமும்
கத்துக்குட்டி தருமிகளிடமும்
எதிர்வாதம் செய்யும் அந்த
தமிழ்க்கடவுளை தரிசித்தாயா நீ?

அருந்தமிழ் நூல் காக்கும்
அகத்திய முனிபோலும்-அந்த
அடர்ந்த மரத்தடியில்-அவன்
அற்புதத் தவம் அறிவாயா நீ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்கடலில் பள்ளி கொள்ளும்
பரந்தாமனைப் போலும்-பழைய
நூற்கடலில் நூதனமாய் அவன்
பள்ளிகொள்வதைப் பார்த்திருக்கிறாயா நீ?

பகலிலே மீன்களின் கூட்டமாய்
பரவசப்படுத்தும் பழைய புத்தகங்கள்-இரவிலே
பாலிதீன் போர்வைக்குள் விம்மி, வீங்கி
ஆதிசேசனாய் அச்சுறுத்தும். . .

எந்த திருவாதவூரனுக்காய்
குறுந்த மரத்தடியில் ஞானபீடமாய்
இந்த மனித மகான்?

சித்தார்த்தனுக்காய் தவம் இருக்கின்றன
இந்த போதிமரங்கள். . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் போதிமரம்

அநாதியான ஆண்டவனின்
அற்புதப் படைப்புக்களில்
இதுவும் ஒன்று.

தாய்மடி முட்டி
ஓடி ஓடியும்
ஓய்ந்திருந்தும் பால்குடிப்பது
ஓவியக் காவியம்..

பேர்சூட்டியும் பாராட்டியும்
பிறந்தநாள் கொண்டாடியும்
பெருமிதப் பட்டிருக்கலாம்.

துணி துவைக்கும்போதும்
சமையலறை சாகசங்களின்போதும்
சயன அறை சரசங்களின்போதும்
ஊமை சாட்சியாய்
"உம்"மென்று ஓரமாய் இருந்திருக்கலாம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலை ஆட்டிக்கொண்டே
வாசல்வரை - ஏன்
வீதிவரை கூடவந்து
வழி அனுப்பியிருக்கலாம் - இல்லை
வழிமேல் விழி வைத்து
எதிர்பார்த்திருந்திருக்கலாம்.

செல்லப் பிராணியை ........
"நாய்" என்று சொல்லாதே!
பேர் சொல்லிக் கூப்பிடென்று
போதிக்கிறார்கள்
பெற்றெடுத்த பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறிய தாய் நினைவுகள்

எந்தையை ஊடியும் கூடியும்
முயங்கப் பெற்றிருக்க வேண்டும் அவள்.

பனிக்குடத்துள் நான்
பாகாய்க் கசிவதைப்
பரவசத்தோடு
பார்த்திருக்க வேண்டும் அவள்.

ஈன்ற பொழுதில் பெரிதுவந்து
தலை வாரிப் பூச்சூடி
சந்திவரை வந்து
சான்றோனாக்கியிருக்க வேண்டும் அவள்.

பழஞ்சோறாய் இருந்தாலும்
பால் நிலாவைக் காட்டிப்
பசியாற்றியிருக்க வேண்டும் அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்கோல் பிடித்தவன் மகன்
எழுதுகோல் ஏந்தி வட்டமடிப்பதை
வாஞ்சையோடும், இறுமாப்போடும் பார்த்து
எழுச்சி கொண்டிருக்க வேண்டும் அவள்.

பின்னாளில்.....
எழுதுகோல் ஏந்தியகைகளில்
அதிகாரக் கோலும், ஆயுதமும்
அகப்பட்டதற்காகவும்
அச்சப்பட்டிருக்கவும் வேண்டும் அவள்.

ஆனாலும்.....
எனக்கு நினைவு தெரிந்த நாள்முதலாய்
நினைவு தவறி இருந்தாள்
எனைப் பெற்றெடுத்துப் பேரிட்டுப்
பேணிவளர்த்த பேதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லத்தின் கேள்வி

நீ விரும்பியதெல்லாம்
நான் செய்ய வேண்டுமென்று
எதிர்பார்க்கிறாய்.

என் சுயம் மறுக்கிறாய்
நான் மட்டும் உனக்கு
விசுவாசமாய் இருக்கவேண்டுமென்று
விரும்புகிறாய்
நீ எனக்கு விசுவாசமாய் இருப்பதுபற்றி
யோசித்ததில்லை எப்போதும்.

என் உடல் உபாதைகள்தான்
உனக்கு புரிவதில்லை
என் உடல் மொழியாவது
புரிவது எப்போது?

நீ கையால் எழுதுவதால்
நான் காலால் எழுதுவதை
நீ கண்டுபிடிப்பதில்லை
வாலாலும் சில வார்த்தைகள்
பேசுவேன், உனக்கு புரிவதில்லை.

தாய்மொழியே உனக்குத் தகராறு
எங்கே புரியப் போகிறது
என் மொழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைச் சட்டை ஆகும்
## காக்கிச்சட்டை



பள்ளியில்
பாரதியைப் படித்தேன்
வெள்ளைச் சட்டை போட்டிருந்தேன்

கல்லூரியில்
காரல் மார்க்ஸ் படித்தேன்
சிவப்புச் சட்டை போட்டிருந்தேன்



காலம் என் மீது
காக்கிச் சட்டையைப் போர்த்தியது
விட்டு விடுதலையாகினேன்

மறுபடியும்
எனக்குப் பிடித்தமான
கவிதைச் சட்டையோடு
காலமெல்லலாம்
உங்களோடு நான்
காலார நடந்திடுவேன்

அன்புடன்
பேனா. மனோகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org